மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: துணைத் தலைவரவர்களே,

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

8. அறிவிப்பு.

சட்டமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் என். வி. என். சோமு, து. புருஷோத்தமன் கைது செய்யப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சென்னை மாநகர காவல்துறை ஆணையாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி இன்று 12-58 மணிக்கு வரப்பெற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

From Thiru S. Sripal. I have the honour to inform you that Tvl. N.V.N.Somu, MLA and D.Purushothaman, MLA, were arrested at abou 11.15 hours today (29-8-81) along with other DMK Partymen in 'X' Station Cr. No. 477/81 u/s 143 IPC r/w 41 MCP Act and 7(1) Criminal Law Amendment Act near Anna Statue on Anna Salai for taking out a procession in violation of prohibitory order in force and causing obstruction to road users and free flow of traffic. They were sent for remand.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 31-8-1981 அன்று காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·24 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.